**Kalanjiyam International Journal of Tamil Studies**
களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
https://ngmtamil.in/
DOI: https://doi.org/10.63300/kijts04052026

*Article Type: Original Research Article*

# Contribution of Kongu Region Poets to Tamil Literature

**Dr. S. Selvakumar*,**

*Assistant Professor, Department of Tamil Literature N.G.M. College, Pollachi*

*Correspondence: selvakumar@ngmc.org, Tel: 9442549078

**Received**: 22-01-2026; **Revised**: 24-01-2026; **Accepted**: 27-01-2026; **Published**: 01-02-2026

**Abstract:** Tamil literature possesses a vast and ancient heritage spanning over two thousand five hundred years. From the Sangam era to the contemporary period, poets residing in the Kongu region have contributed significantly to every genre of Tamil literature. This lineage includes both male and female poets who enriched the language through their unique perspectives and scholarly depth. This article identifies these various poets and provides a detailed analysis of their literary works.

**Keywords:** Dance, Mathematics, Tāla Structure, Jathi, Rhythm (Laya), Mātra, Aesthetics.

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# தமிழ் இலக்கியத்திற்குக் கொங்குநாட்டுப் புலவர்களின் பங்களிப்பு

***முனைவர் சு.செல்வக்குமார்** , உதவிப்பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை,
என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழிலக்கியம் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட நீண்ட நெடிய பரப்புடையது. தமிழில் சங்ககாலம் தொடங்கி இக்காலம் வரை தோன்றிய அனைத்து வகையான இலக்கிய வகைகளுக்கும் கொங்குப் பகுதியில் வாழ்ந்த புலவர்கள் பங்களிப்புச் செய்துள்ளனர். அவர்களுள் ஆண்பாற்புலவர்களும் பெண்பாற்புலவர்களும் இடம்பெற்றுள்ளனர். அந்தப்புலவர்கள் யாவர் என்பது குறித்தும் அவர்களின் படைப்புகள் குறித்தும் எடுத்துரைக்கிறது இக்கட்டுரை.

**திறவுச்சொற்கள்**

கொங்குநாடு, சங்க இலக்கியம், பண்பாடு, வரலாறு, கருவூர், புரவலர், புலவர், பொறைய அரசர்கள்.

**முன்னுரை**

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்ககால இலக்கியங்கள் பல நிலைகளில் சிறப்புக்குரியன. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்ற தொகை நூல்களில் இடம்பெறும் கவிதைகள் சங்ககாலத்திய மக்களின் வரலாற்றையும் பண்பாட்டையும் பேசுவன. இந்நூல்களில் இடம்பெற்றுள்ள கவிதைகளை எழுதிய புலவர்கள் பல தரப்பினர் ஆவர். அரசர், வணிகர், வேளாளர், பிறர் என்ற வரிசையில் ஆண்களும் பெண்களும் என இருபாலரும் கவிதைகளை எழுதியுள்ளனர். புலவர்கள் அரசர்களையும் வள்ளல்களையும் நாடிச் சென்று அவர்களைப் பற்றிப் பாடி பரிசுகள் பெற்றுள்ளனர். மேற்குறித்த தொகை நூல்களில் இடம் பெற்ற கவிதைகள் பலவற்றைக் கொங்கு நாட்டைச் சேர்ந்த புலவர்களும் பாடியுள்ளனர். அவர்களுள் ஆண்பாற்புலவர்களும் பெண்பாற்புலவர்களும் இடம்பெற்றுள்ளனர். தமிழ் இலக்கியத்தில் சங்ககாலம் தொடங்கி இக்காலம் வரை தோன்றிய அனைத்து வகையான இலக்கியவகைகளுக்கும் கொங்குப் பகுதியில் வாழ்ந்த புலவர்கள் தங்கள் பங்களிப்பைச் செய்துள்ளனர். அவர்களைப்பற்றியும் அவர்கள் எழுதிய படைப்புகள் குறித்த செய்திகளையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

**கொங்கு நாடு**

தமிழகத்தின் ஒரு பகுதியாக விளங்குவது கொங்குப் பகுதியாகும். பண்டைக்காலம் முதற்கொண்டு கொங்குப்பகுதியானது தனக்கெனத் தனித்த வரலாற்றையும் அடையாளங்களையும் சிறப்புகளையும் பெற்றுவருகிறது. சங்ககாலத் தமிழகம் துளு நாடு, சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு, தொண்டை நாடு, கொங்கு நாடு என ஆறு பிரிவுகளை உடையதாக இருந்தது. கொங்குநாடு என்பது தனக்கெனத் தனித்த நிலவியல் சிறப்புடையது. பழங்காலத்திலேயே ஒரு நாட்டுக்குரிய பல தன்மைகளைக் கொண்டிருந்துள்ளது. அவற்றுள் எல்லைகள், இயற்கைவளம், அரசர்கள், புலவர்கள், மக்கள் இலக்கியங்கள், கலைகள், தொழில்கள் எனப் பல கூறுகள் அடங்கும். தற்போதுள்ள தமிழகத்தின் மேற்குப் பகுதியில் கொங்கு மண்டலம் அமைந்துள்ளது. இந்நிலப்பகுதி கோயம்புத்தூர்,

ஈரோடு, திருப்பூர், கரூர், நாமக்கல், சேலம், நீலகிரி, திண்டுக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களை உள்ளடக்கியதாகும்.

**கொங்குநாட்டு சங்கப்புலவர்கள்**

கொங்கு நாட்டுப் புலவர்கள் யாவர் என்பதைப் பல அறிஞர்கள் ஆராய்ந்து கூறியுள்ளனர். மயிலை சீனி.வேங்கடசாமி, புலவர் குழந்தை, புலவர் இராசு, சிற்பி பாலசுப்பிரமணியம் ஆகிய அறிஞர் பெருமக்கள் கொங்குநாட்டுப் புலவர்கள் யாவர் என்பது குறித்துத் தங்களுடைய நூல்களிலும் கட்டுரைகளிலும் எழுதியுள்ளனர். மயிலை சீனி.வேங்கடசாமி கொங்குநாட்டுப் புலவர்களைப் பின்வருமாறு வரிசைப் படுத்தியுள்ளார்.

1. அஞ்சியத்தை மகள் நாகையார் 2. அதியன் விண்ணத்தனார் 3. அரிசில்கிழார் 4. உம்பற்காட்டு இளங்கண்ணனார் 5. ஔவையார் 6. கருவூர்க் கண்ணம் பாளனார் 7. கருவூர்க் கதப்பிள்ளை சாத்தனார் 8. கருவூர் கலிங்கத்தார் 9. கருவூர்க்கிழார்10. கருவூர்க் கோசனார் 11. கருவூர்ச் சேரமான் சாத்தன் 12. கருவூர்ப் பவுத்திரனார் 13. கருவூர் பூதஞ்சாத்தனார் 14. கருவூர்ப்பெருஞ்சதுக்கத்துப்பூதனார் 15. கொல்லிக் கண்ணனார் 16. சேரமான் கணைக்கால்இரும்பொறை 17. பாலை பாடியபெருங்கடுங்கோ 18. பேய்மகள் இளவெயினி 19. பொன்முடியார் 20. பெருந்தலைச் சாத்தனார் 21. மருதம் பாடிய இளங்கடுங்கோ (மயிலை சீனி வேங்கடசாமி, கொங்கு நாட்டு வரலாறு .ப.171)

புலவர் குழந்தை கொங்குநாட்டுப் புலவர்களாகப் பின்வருகின்றவர்களைக் குறிப்பிடுகிறார்.

1. அஞ்சியத்தை மகள் நாகையார்-நெடுமான் அஞ்சியின் மனைவியார் தகடூர்- (பாடல்-அகம். 352) 2. அதியன் விண்ணத்தனார் – தகடூர்நாட்டினர் 3. அந்தி இளங்கீரனார்- பவானி அருகே உள்ள அந்தியூர் 4. ஆலத்தூர் கிழார் -ராசிபுரம் வட்டத்து ஆலந்தூர் 5. ஆவியார் 6. இரும்பிடர்த்தலையார் 7. உலகடத்து சுந்தரத்தனார் 8. எருமை வெளியனார் - எருமை நாட்டு எருமையூர் 9. வெளியனார் மகனார் கடலனார் 10. கருவூர் ஓதஞானியார் 11. கருவூர்க் கண்ணம் பாளனார் 12. கருவூர்க் கண்ணம் புல்லனார் 13. கருவூர்க் கதப்பிள்ளை 14. கருவூர்க் கதப்பிள்ளை சாத்தனார் 15. கருவூர்க் கலிங்கத்தனார் 16. கருவூர்க் கிழார் 17. கருவூர்க் கோசனார் 18. கருவூர் சேரமான் சாத்தனார் 19. கருவூர் நன் மார்பனார் 20. பவுத்திரனார் 21. குடவாயிற் கீரத்தனார் 22. குடவாயிற் கீரக்கனார்

23. கொடி மங்கலத்து வாதுளி நற்சேர்ந்தனர்-உடுமலை வட்டம் குடிமங்கலம் 24. கொல்லிக் கண்ணனார் - கொல்லி மலை நாடு 25. செங்குன்றத்தனார் - திருச்செங்கோடு

26. தகடூர் யாத்திரை நூலாசிரியர் பெயர் தெரியவில்லை 27. பெருந்தலைச் சாத்தனார் -பவானி வட்டம் பெருந்தலையூர் 28. பொன்முடியார் (தகடூர் நாட்டு பொன்முடி)

இவர்கள் சங்ககாலத்தைச் சார்ந்த கொங்கு நாட்டில் இருந்த புலவர்கள் என்பது புலவர் குழந்தையின் முடிவாக உள்ளது. கல்வெட்டியல் ஆய்வாளர் புலவர் செ.இராசு கொங்கு நாட்டுப் புலவர்களாக பின்வருபவர்களைக் கூறியுள்ளார்.

அவ்வையார்- தகடூர் அதியமான் அரசவைப் புலவர், அஞ்சி அத்தைமகள் நாகையார் – தகடூர், அதியன் விண்ணத்தனார் –தகடூர் அந்தி இளங்கீரனார், ஆலந்தூர் கிழார் ஆவியார், இரும்பிடர்த்

தலையார், ஒரோகடத்துத் கந்தரத்தனார், கருவூர் ஓதமானியர், கருவூர்க் கண்ணம் பாளனார்,கருவூர்க் கண்ணம் புல்லனார், கருவூர்க் கதப்பிள்ளை, கருவூர் கலிங்கத்தனார், கருவூர் கிழார், கருவூர் கோசனார், கருவூர் சேரமான் சாத்தனார், கருவூர் நன்மார்பனார், கருவூர் பவுத்திரனார், கருவூர் பூதஞ்சாத்தனார். கருவூர் பெருஞ்சதுக்கத்துப் பூதனார், குடவாயில் கீரத்தனார், குடவாயில் கீரன் நக்கனார், கொடி மங்களத்து வாதுளி நற் சேந்தனார், கூடலூர் கிழார்,கொல்லிக் கண்ணனார், செங்குன்றூர் கிழார், பாலை பாடிய பெருங்கடுங்கோ, பெருந்தலைச் சாத்தனார், பொருந்தில் இளங்கீரனார், பொன்முடியார், மருதம் பாடிய இளங்கடுங்கோ, மூலங்கிழார், வெள்ளடியார். (வளமார் கொங்கு, ப.28) மேற்காட்டிய அறிஞர்களின் பட்டியல்களில் பெரும்பாலான புலவர்கள் திரும்ப இடம் பெற்றுள்ளார்கள்.

மயிலை சீனி. வேங்கடசாமி கொங்குநாட்டுப் புலவர்கள் குறித்த பல செய்திகளை அவருடைய கொங்குநாட்டு வரலாறு என்ற நூலில் எழுதியுள்ளார். அவர், எட்டுத்தொகையில் இடம்பெற்றுள்ள அகநானூறு, புறநானூறு, நற்றிணை, பதிற்றுப்பத்து ஆகிய நூல்கள் கொங்கு நாட்டின் வரலாற்று ஆராய்ச்சிக்கு மிகவும் துணைபுரிகின்றன என்று குறிப்பிட்டுள்ளார். இந்த நான்கு நூல்கள் இல்லையாயின் கொங்கு நாட்டின் வரலாறு கொஞ்சம் கூடத் தெரியாமல் போயிருக்கும் என்பது அவரின் கருத்தாகும். பதிற்றுப்பத்தில் இடம்பெற்றுள்ள இறுதி நான்கு பத்துகள் கொங்கு நாட்டை ஆண்ட சேர அரசர்களைப் பற்றிக்கூறுகின்றன. இவர்களில் இளையவழி அரசர்கள்தான் கொங்கு நாட்டை ஆண்டவர்கள் என்பதும் இவர்கள் பொறைய அரசர்கள் என்பதும் இவரின் ஆராய்ச்சியில் தெரியவருகிறது.

**சங்ககாலக் கொங்கு நாட்டுப்புலவர்கள்**

சங்ககாலக் கொங்கு நாட்டுப் புலவர்கள் குறித்துச் சில செய்திகள் சுருக்கமாக இங்கே கூறப்படுகின்றன. அவர்கள் பின்வருமாறு…

**அஞ்சியத்தை மகள் நாகையார்**

இவர் பெண்பாற் புலவர். நாகை என்பது இவரின் இயற்பெயர். அஞ்சியத்தை மகள் என்பது சிறப்புச் சொல். தகடூர் அதியமான் அரசர்களில் அஞ்சி என்னும் பெயர் உள்ளவர்கள் சிலர் இருந்துள்ளனர். அந்த அரசர்களில் யாரோ ஒருவருடைய மகளாக இவர் இருக்கலாம். அஞ்சி ஒருவருடைய மனைவியாக இருக்கலாம் என்ற கருத்தும் உண்டு. அகம்.352 இவர் எழுதிய பாடல் ஆகும்.

**அதியன் விண்ணத்தனார்**

இப்பெயரில் அதியன் என்பது குலப்பெயர். விண்ணத்தனார் என்பது இயற்பெயர். இவர் அரசகுலத்தைச் சேர்ந்தவராகக் கருதப்படுகிறார். (அகம்.301)

**அரிசில் கிழார்**

அரிசில் என்ற ஊருக்கு இவர் தலைவராக விளங்கியமை தெரிகிறது. கபிலர், பெருங்குன்றூர்கிழார், பொன்முடியார், ஔவையார் ஆகியோர் இவர் காலத்தைச் சேர்ந்தவர்கள். தகடூர்ப்போரை வென்ற பெருஞ்சேரல் இரும்பொறையின் மேல் இவர் பத்துப் பாடல்களைப்

(பதிற்றுப்பத்து இரண்டாம் பத்து) பாடியுள்ளார். இதற்காக அம்மன்னன் ஒன்பது லட்சம் பொன்னையும் தன் அரண்மனையையும் தன்னுடைய சிம்மாசனத்தையும் இப்புலவருக்குப் பரிசாகக் கொடுத்துள்ளான். ஆனால், புலவர் அவற்றையெல்லாம் ஏற்றுக் கொள்ளாமல் அரசனுக்கு அமைச்சராக இருந்துள்ளார். இப்பண்பு இப்புலவரின் மேன்மையைக் காட்டுகிறது. (அவருடைய பாடல்கள் குறுந்.193,புறம்.146,281,285,300,304,342)

**உம்பற்காட்டு இளங்கண்ணனார்**

உம்பற்காடு என்பது கொங்கு நாட்டு ஊர். இவருடைய இயற்பெயர் இளங்கண்ணனார். யானைகள் இருக்கின்ற உம்பற்காட்டில் வாழ்ந்தவர் என்பதால் இப்பெயர் பெற்றார் என்பர்.

**ஔவையார்**

கொங்கு நாட்டில் ஒரு பகுதியாகிய விளங்கிய தகடூரை ஆண்ட அதியமான் நெடுமான் அஞ்சியின் அவைக்களப் புலவராக விளங்கியவர். இம்மன்னனின் மகனான பொகுட்டெழினியையும் ஔவையார் பாடி யுள்ளார். ஔவையார் பாடல்களில் பல வரலாற்றுச்செய்திகள் இடம் பெற்றுள்ளன. பல பாடல்களை எழுதியுள்ளார். (புறம். 87,88, 89,90,91, 94, 95, 97,98,100,101,103,104,206,315,320,342) ஔவையார் காலத்துக் கவிஞர்களாக கபிலர், பரணர், இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனார் ஆகிய புலவர்கள் இருந்துள்ளனர் என்று மயிலை சீனி வேங்கடசாமி குறிப்பிடுகிறார்.(கொங்கு நாட்டு வரலாறு.ப.179)

**கருவூர்க் கண்ணம்பாளனார்.**

இவர் கொங்கு நாட்டுக் கருவூரில் வாழ்ந்தவர். இவர் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை குறித்துப் பாடும் போது அவனை கோதை என்ற சிறப்புப் பெயரால் குறித்துள்ளார்.(அகம்.180,263, நற்.148)

**கருவூர்க் கதப்பிள்ளை சாத்தனார்**

கொங்குநாட்டுக் கருவூரில் வாழ்ந்தவர். இவர் புறநானூற்றில்(168) கொங்குச் சேரரின் படைத் தலைவனான குதிரைமலைப் பிட்டங்கொற்றனைப் பாடியுள்ளார். (அகம்.309, நற்.343,புறம்.168)

**கதப்பிள்ளையார்**

இவரும் மேற்குறித்தவரும் ஒருவராக இருக்கலாம் என்ற கருத்துமுண்டு. கதப்பிள்ளையார் பெயரில் குறு. 64. 265, 380, நற்.135 ஆகிய பாடல்கள் உள்ளன.

**கருவூர்க் கலிங்கத்தார்**

இவர் கரூரிலிருந்து கொங்குநாடு சென்று, சிலகாலம் வாழ்ந்து விட்டு, மீண்டும் கரூர் வந்து வாழ்ந்திருக்கலாம் என்று மயிலை சீனி. வேங்கடசாமி கருதுகிறார். மேலும், இவர் வணிகத்தின் பொருட்டுக் கலிங்க நாடு சென்றி ருக்கலாம் என்றும் கருதுகிறார். இவர் பாடிய பாடல் அகம்.183 ஆகும்.

**கருவூர்க் கோசனார்**

இவர் கோசர் என்ற இனத்தைச் சார்ந்தவராக இருக்கலாம். கோசர் இனத்தைச்சேர்ந்த இவர் கொங்கு நாட்டுக் கருவூரில் வாழ்ந்தபடியால் இப்பெயர் பெற்றுள்ளார். பாலைத் திணையில் அமைந்த இவர் பாடல் நற்றிணையில் (214) இடம் பெற்றுள்ளது.

**கருவூர்ச் சேரமான் சாத்தன்**

இவர் சேரமன்னர் குலத்தைச் சேர்ந்தவர் ஆவார். இவருடைய செய்யுள் ஒன்று குறுந்தொகையில் (268) இடம்பெற்றுள்ளது. இவர் கொங்குநாட்டில் உள்ள கருவூரில் வாழ்ந்தவர்.

**கருவூர் நன்மார்பனார்**

நன்மார்பன் என்பது இவரின் இயற்பெயர். இவர் கருவூரில் வாழ்ந்தவர். இவருடைய பாடல் அகம் 277 ஆகும்.

**கருவூர் பூதஞ்சாத்தனார்**

பேய், பூதம், சாத்தன் என்னும் பெயர்கள் சங்ககாலத்தில் மக்களுக்கு இடப்பெற்ற பெயர்களாக வழங்கி வந்துள்ளன. கொங்குநாட்டுக் கருவூரில் பூதம் என்னும் தெய்வத்துக்குக் கோயில் இருந்துள்ளது. இந்தப்புலவருக்கு அந்தத் தெய்வத்தின் பெயர் இடப்பட்டிருக்கலாம். (அகம். 50)

**கருவூர் பெருஞ்சதுக்கத்துப் பூதனாதனார்**

கருவூரில் பெரும்சதுக்கம் என்னும் இடத்தில் இருந்தவர் என அறிய வருகிறது. கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர் விட்டபோது அவன் மீது கையறுநிலை பாடியுள்ளார் (புறம். 219)

**கொல்லிக் கண்ணனார்**

கொல்லி என்பது இவருடைய ஊர்ப்பெயர். கொல்லிக் கூற்றத்துக் கொல்லி என்னும் ஊரில் இருந்தவர் என்று தெரிகிறது. இவர் பாடிய குறுந்தொகை 34ஆம் பாடலில் குட்டுவன் மாந்தை பற்றிக் கூறியுள்ளார். மாந்தை என்பது கொங்குச் சேரர்களுக்கு மேற்குக்கரையில் இருந்த துறைமுகப் பட்டினம் ஆகும்.

**சேரமான் கணைக்கால் இரும்பொறை**

கொங்கு நாட்டை ஆட்சி செய்த கொங்குச் சேரர்களின் கடைசி அரசர் இவராவார். இவர் புலவராகவும் விளங்கியுள்ளார். இவருடைய அவைப் புலவராகப் பொய்கையார் இருந்துள்ளார். சோழ நாட்டு அரசன் செங்கட்சோழனுக்கும் கணைக்கால் இரும்பொறைக்கும் திருப்போர்ப்புறம் என்னும் இடத்தில் நடந்த போரில் கணைக்கால் இரும்பொறை தோல்வியடைந்ததால் சோழனால் சிறைப்பிடிக்கப்பட்டு குடவாயில் என்னும் இடத்தில் சிறைவைக்கப்பட்டுள்ளார். இம்மன்னனை விடுவிக்கச் செங்கட்சோழன் மீது பொய்கையார் 'களவழி நாற்பது'என்ற நூலைப் பாடியுள்ளார்.

இந்த இரு மன்னர்களின் காலம் கி.பி. 200க்கும் கி.பி.250க்கும் இடைப்பட்டதாகும். கணைக்கால் இரும்பொறை குடவாயில் சிறையில் இருந்தபோது, நீர்த்தாகம் ஏற்பட காவலர்களிடம் நீர் கேட்க, அவர்கள் காலம் தாழ்த்திக் கொண்டு வந்து கொடுத்த நீரைப்பருக மனமில்லாமல் மானஉணர்ச்சி மேலிடப் பாடியதே 'குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்'எனத் தொடங்கும் பாடல் (புறம்.74) ஆகும். இன்றுவரை இந்தப்பாட்டு சங்கத்தமிழர்களின் மானஉணர்விற்கு எடுத்துக்காட்டாக

விளங்கிவருகிறது. சங்ககாலத்துக் கொங்குநாட்டு வரலாற்றின் இறுதியில் இடம்பெறுவது இம்மன்னனே.

சங்ககால கொங்குப்புலவர்கள், கொங்குநாட்டை ஆண்ட அரசர்களைப் பற்றி, கிடைத்த தரவுகளைக்கொண்டு மயிலை சீனி. வேங்கடசாமி விரிவான ஆய்வை “கொங்குநாட்டு வரலாறு“ என்ற நூலில் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**சங்க காலத்துக்குப் பிந்தைய கொங்குப் புலவர்களும் படைப்புகளும்**

சங்ககாலத்தை அடுத்து கொங்குப்பகுதியில் வாழ்ந்த புலவர்களும், வாழ்ந்துவரும் கவிஞர்களும் எழுத்தாளர்களும் இன்றுவரை சிறந்த இலக்கியப் படைப்புகளை வழங்கியுள்ளனர், வழங்கிவருகின்றனர். கொங்குவேளிர் என்ற கொங்குநாட்டுப்புலவர் பெருங்கதை என்ற காப்பியத்தை எழுதியுள்ளார். இது கொங்கு நாட்டுப்பண்பாட்டை சிறப்புறக் காட்டும் நூலாக விளங்குகிறது. இவர் ஒரு குறுநில மன்னர் ஆவார். இவர் கடைச்சங்க காலத்தை ஒட்டிய காலப்பகுதியில் வாழ்ந்தவராகக் கருதப்படுகிறார். அடியார்க்குநல்லார் என்பவர் கொங்குநாட்டில் உள்ள விஜயமங்கலத்தை அடுத்த நிரம்பை என்ற ஊரைச் சேர்ந்தவர். இவர் சிலப்பதிகாரத்திற்கு எழுதிய உரை இன்றளவும் சிறந்து விளங்கி வருகிறது.

மூன்றாம் குலோத்துங்கன் காலத்தைச் சேர்ந்தவரான (1178-1218) குணவீரபண்டிதர் கொங்குநாட்டவர். இவர் நேமிநாதம், வெண்பாப் பாட்டியல் ஆகிய இலக்கண நூல்களின் ஆசிரியர். பொள்ளாச்சி வட்டத்துக் களந்தை என்ற ஊரைச் சேர்ந்த வச்சணந்தி, விஜயமங்கலத்தை அடுத்த சீனாபுரத்தைச் சேர்ந்த நன்னூல் ஆசிரியர் பவணந்திமுனிவர், திருச்செங்கோட்டை அடுத்த மோரூரைச் சேர்ந்த உரிச்சொல்நிகண்டு ஆசிரியர் காங்கேயர் போன்றவர்கள் சிறந்த நூல்களைத் தந்துள்ளனர். கொங்கு வேளிரின் பெருங்கதைக் காப்பியத்தைப் போன்று தக்கைராமாயணமும் சிறந்த காப்பியமாகக் கொங்குநாட்டில் எழுந்துள்ளது. இதன் ஆசிரியர் சங்ககிரி வட்டத்திலுள்ள பத்தர்பாடி என்ற ஊரைச்சார்ந்த எம்பெருமான் கவிராயர். இதன் காலம் பதினேழாம் நூற்றாண்டு. இது நல்லதம்பிக் காங்கேயனின் தூண்டுதலில் எழுதப்பட்ட இசைக்காப்பியமாகும். இந்நூல் சங்ககிரி வரதராசப்பெருமாள் ஆலயத்தில் அரங்கேற்றம் செய்யப்பட்டதாகும்..

வில்லிபுத்தூராரின் வில்லிபாரதம் கொங்கு இலக்கிய வரிசையில் சிறப்பிடம் பெறுகிறது. வரபதியாட்கொண்டான் என்ற மன்னனின் வேண்டுகோளின்படி வில்லிபுத்தூராழ்வார் பாரதம் பாடியுள்ளார். கோவைக்கு அருகேயுள்ள சிரவை ஆதீனம் கந்தசாமிசுவாமிகள் பாடிய பக்தமான்மியம் வைணவ அடியார்களின் வரலாற்றுக்காப்பியம் ஆகும். பல வைணவ நூல்களில் கூறப்படும் அடியார்கள் வரலாறுகளையும் இராமானுசர் வரலாற்றையும் இக்காப்பியம் பேசுகிறது.

புலவர் குழந்தை இயற்றியது ராவணகாவியம். அ.கிருஷ்ணசாமிநாயுடு எழுதிய திருவள்ளுவர்காவியமும் குறிப்பிடத்தக்கது. காப்பியங்கள் போலச் சிறிய வடிவில் அமைந்த காப்பியங்களும் கொங்கு வட்டார இலக்கியங் களுக்கு அணி சேர்க்கின்றன. இரா.வடிவேலனின் மருதமலைச் சாரல், கம்பராமனின் மேகநாதம், சிற்பியின் மௌனமயக்கங்கள், சிரித்தமுத்துக்கள், சொல்வேந்தனின் தேவர்காவியம், சூலூர்க் கலைப்பித்தனின் தேவர்காவியம், பொறிஞர்

புருடோத்தமனின் தமிழ்கூறும் நல்லுலகம், டாக்டர் ந. கோபாலனின் கலைஞர்காவியம், கவிஞர் அவைக்கரசுவின் நாவலர் காவியம், ஞானியின் அகலிகை ஆகிய படைப்புகள் சிறந்த சிறுகாப்பிய வடிவங்கள்.

இவை மட்டுமல்லாது சைவசமய இலக்கியங்களோடு கொங்குநாடு பெரும் தொடர்பு கொண்டதாகும். கொங்கு நாட்டில் அமைந்த கொடுமுடி, திருநணா, திருச்செங்கோடு, அவினாசி, திருமுருகன்பூண்டி, கரூர், வெஞ்சாமக்கூடல் முதலியன தேவாரப் பாடல்பெற்ற தலங்கள் ஆகும். பேரூர், அவிநாசி, திருமுருகன் பூண்டி, குரக்குத்தளி, மொக்கணீச்சுரம், திருச்செங்கோடு, ஏமூர், அறப்பளீச்சுரம், மயிண்டீச்சுரம், தகடூர், வெஞ்சாமக்கூடல் ஆகியன தேவாரப்பாடல்களில் பெயர் குறிக்கப்படும் வைப்புத்தலங்கள் ஆகும்.

அருணகிரிநாதரின் திருப்புகழில் கொங்குநாட்டில் அமைந்துள்ள பழனி, தென்சேரி முதலிய திருத்தலங்கள் இடம்பெற்றுள்ளன. இடைஞானியார், கருவூரார், கொங்கணர். போகர், பாம்பாட்டி, புலிப்பாணி ஆகிய சித்தர்கள் பல பாடல்களைத் தந்துள்ளனர். வைணவ இலக்கியங்களும் கொங்கு நாட்டில் தோன்றியுள்ளன.

தெய்வங்களையும், சமுதாயத்தில் செல்வாக்குப் பெற்றோரையும் பாட்டுடைத்தலைவர்களாகக் கொண்டு கோவை, சதகம், தூது, பிள்ளைத்தமிழ், குறவஞ்சி, உலா, அந்தாதி, பள்ளு, பிள்ளைத்தமிழ், மாலை, கலம்பகம், அலங்காரம், விலாசம், மஞ்சரி முதலிய சிற்றிலக்கியங்கள் பல கொங்கு நாட்டில் தோன்றியுள்ளன. கச்சியப்பமுனிவரின் பேரூர்ப்புராணம் வீராட்சிமங்கலம் கந்தசாமிக் கவிராயரின் வேளாளபுராணம் போன்ற பல புராணங்களும் எழுதப்பட்டுள்ளன.

இக்கால இலக்கியங்களான புதுக்கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள், புதினங்கள் ஏராளமாகத் தோன்றியுள்ளன. தன்வரலாற்று நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், கட்டுரை நூல்கள் மிகுதியாகத் தோன்றியுள்ளன. இக்கால இலக்கியங்களுக்குத் தனி இலக்கிய வரலாறு எழுதுகின்ற அளவுக்கு அவை கொங்கு மண்ணில் தோற்றம் பெற்றுள்ளன.

கொங்குநாட்டுப் பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்தும் கதைப் பாடல்கள் பல உள்ளன. அண்ணன்மார் சுவாமி கதை, நல்லதங்காள் கதை, அல்லிஅரசாணி மலை, பவளக்கொடி மாலை, காத்தவராயன் கதை போன்றவை. அண்ணன்மார் சுவாமி கதையை சமூக வரலாற்று ஆவணம் எனக் கூறுவது மிகப்பொருத்தம் என்கிறார் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம். (கொங்குத் தமிழ்மணிகள், ப.46)

**தொகுப்புரை**

மயிலை சீனி. வேங்கடசாமி, புலவர் குழந்தை, புலவர் இராசு, சிற்பி பாலசுப்ரமணியம் ஆகிய அறிஞர் பெருமக்கள் கொங்குநாட்டுப் புலவர்கள் யாவர் என்பதைத் தங்கள் ஆய்வுகளின் வழி அடையாளங்காட்டியுள்ளனர்.

தமிழ் இலக்கியத்தில் சங்ககாலம் தொடங்கி இக்காலம் வரை தோன்றிய அனைத்து வகையான இலக்கிய வகைகளுக்கும் கொங்குப் பகுதியில் வாழ்ந்த புலவர்கள் தங்கள் பங்களிப்பைச் செய்துள்ளனர். தமிழின் ஆதிகவிதைகளாக விளங்குகின்ற சங்கக் கவிதைகளைப் கொங்குப்

புலவர்களும் அக்காலத்திய இலக்கண, இலக்கிய மரபுகளை அடியொற்றி கவிதைகளைப் புனைந்துள்ளமை தெரியவருகிறது.

எட்டுத்தொகையில் இடம்பெற்றுள்ள அகநானூறு, புறநானூறு, நற்றிணை, பதிற்றுப்பத்து ஆகிய நூல்கள் கொங்கு நாட்டின் வரலாற்று ஆராய்ச்சிக்கு மிகவும் துணைபுரிகின்றன. சங்ககாலக் கொங்குப்பகுதியல் அஞ்சியத்தை மகள் நாகையார் தொடங்கி சேரமான் கணைக்கால் இரும்பொறை வரை எனப்பல தரப்பினரும் சங்ககாலத் திணைஇலக்கியங்களைச் சிறப்புறப் பாடித் தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்த்துள்ளனர்.

சங்ககாலத்திற்குப் பின் வந்த கொங்குப்பகுதியில் வாழ்ந்த புலவர்கள் அந்தந்த காலச் சூழுலுக்கேற்ற இலக்கிய வடிவங்களையும் வகைகளையும் தந்து தமிழ் இலக்கியத்துக்குத் தங்கள் பங்களிப்பைச் செய்துள்ளனர். கொங்கு வட்டாரத் தமிழ் இலக்கியம் என்பது தனியாக ஒரு இலக்கிய வரலாறு எழுதுமளவிற்குப் பரந்த பரப்பு கொண்டுள்ளது.

**ஆய்வுக்குத் துணைநின்ற நூல்கள்**

[1]. அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட், 41-பி,சிட்கோ இண்டஸ் டிரியல் எஸ்டேட், அம்பத்தூர்,

[2]. சென்னை-98, ஐந்தாம் பதிப்பு, அக்டோபர்,2014.

[3]. அப்பாத்துரையார்,கா., கொங்குத்தமிழக வரலாறு, தமிழ்வளர்ச்சி இயக்ககம், எழும்பூர்,

[4]. சென்னை-08,2017.

[5]. ஐங்குறுநூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட், 41-பி,சிட்கோ இண்டஸ் டிரியல் எஸ்டேட், அம்பத்தூர்,

[6]. சென்னை-98, ஐந்தாம் பதிப்பு, அக்டோபர்,2014.

[7]. கலித்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட், 41-பி,சிட்கோ இண்டஸ் டிரியல் எஸ்டேட், அம்பத்தூர்,

[8]. சென்னை-98, ஐந்தாம் பதிப்பு, அக்டோபர்,2014.

[9]. கார்மேகக் கவிஞர், கொங்குமண்டலச் சதகம்.சாரதா பதிப்பகம்.ஜி-4, சாந்தி அடுக்ககம், 3 ஸ்ரீ

[10]. கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பெட்டை. சென்னை-14.ஜீலை,2008.

[11]. குறுந்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட், 41-பி,சிட்கோ இண்டஸ் டிரியல் எஸ்டேட், அம்பத்தூர்,

[12]. சென்னை-98, ஐந்தாம் பதிப்பு, அக்டோபர்,2014.

[13]. கொங்கு களஞ்சியம்-2, மெய்யப்பன் பதிப்பகம், 53.புதுத்தெரு,சிதம்பரம் 01, முதற்பதிப்பு, 2011.

[14]. சிற்பி பாலசுப்பிரமணியம், கவிஞர் சிற்பியின் கட்டுரைக்களஞ்சியம்,(தொகுதி ஆறு) பழனியப்பா

[15]. பிரதர்ஸ், கோனார் மாளிகை, 25, பீட்டர்ஸ் சாலை, இராயப்பெட்டை, சென்னை,14, முதல்பதிப்பு-2016.

[16]. தட்சிணாமூர்த்தி, அ., தமிழர் நாகரிகமும் பண்பாடும், ஐந்திணை பதிப்பகம், ஏ.பி. 1108 தென்றல்காலனி,

[17]. 3 ஆவது தெரு, மேற்கு அண்ணா நகர், சென்னை-40.

[18]. தொல்காப்பியம், (பொருளதிகாரம்), பெரியார் பல்கலைக்கழக வெளியீடு, சேலம்.2012.

[19]. கொங்கு களஞ்சியம்-1, மெய்யப்பன் பதிப்பகம், 53.புதுத்தெரு,சிதம்பரம்-01, முதற்பதிப்பு, 2005.

[20]. நற்றிணை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட், 41-பி,சிட்கோ இண்டஸ் டிரியல் எஸ்டேட், அம்பத்தூர்,

[21]. சென்னை-98, ஐந்தாம் பதிப்பு, அக்டோபர்,2014.

[22]. பதிற்றுப்பத்து, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட், 41-பி,சிட்கோ இண்டஸ் டிரியல் எஸ்டேட்,

[23]. அம்பத்தூர், சென்னை-98, ஐந்தாம் பதிப்பு, அக்டோபர்,2014.

[24]. பரமசிவானந்தம், அ.மு. சமுதாயமும் பண்பாடும், தமிழ்க்கலைப்பதிப்பகம், தமிழ்க்கலை இல்லம்,

[25]. சென்னை-30. செப்.1972.

[26]. புலவர் குழந்தை, கொங்கு நாடு, சாரதா பதிப்பகம், ஜி-4 சாந்தி அடுக்ககம்,3 ஸ்ரீ கிருஷ்ணாபுரம்

[27]. தெரு,ராயப்பெட்டை,சென்னை-14, ஏப்ரல்-2007.

[28]. பெருமாள்,அ.கா., தமிழகப்பண்பாடு, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி. சிட்கோ இண்டஸ்

[29]. டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-98, டிசம்பர்,2008.

[30]. மீனாட்சிசுந்தரம், தெ.பொ. தமிழும் பிற பண்பாடும், நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி. சிட்கோ

[31]. இண்டஸ் டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-98,எட்டாம் பதிப்பு,1999.